தேதி.28.07.2026

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S. No.230/2023 திரு.சரவணக்குமார், த/பெ.காநாடன் பி.சா.1

பி.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதி லிங்கராஜ் நான் வாடகைக்கு குடியிருந்த உரிமையாளர் தேவி என்பவரின் சகோதரர் என்றால் சரிதான். நானும், தேவியும் மணல், ஜல்லி கூட்டுவியாபாரம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூட்டு வியாபாரம் எப்போது ஆரம்பிக்கப்பட்டு எவ்வளவு நாட்கள் நடந்தது என்றால் கூட்டு வியாபாரம்ஆரம்பிக்கப்படவில்லை ஆரம்பிக்கலாம் என்று சொல்லப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூட்டு வியாபாரம் செய்தோம், அதனால் மனக்கசப்பு ஏற்பட்டது என்று சொல்லிருந்தால் அது தவறு என்றால் கூட்டு வியாபாரம் செய்தோம். மேற்படி தொழில் எப்போது ஆரம்பிக்கப்பட்டு எவ்வளவு நாட்கள் கூட்டு வியாபாரம் செய்தோம் என்றால் 2016ல் ஆரம்பிக்கப்பட்டு 2019 வரை கூட்டு வியாபாரம் செய்தோம். மேற்படி தொழிலில் என்னுடைய முதலீடு எவ்வளவு என்றும், தேவியின் முதலீடு எவ்வளவு என்றால் நான் ரூ.50,000/– முதலீடு செய்தேன், தேவி முதலீடு செய்யவில்லை. கூட்டுவியாபாரத்தில் இருவரும் எழுத்துப்பூர்வமான ஆவணம் எதேனும் செய்து கொண்டோமா என்றால் இல்லை. தேவி எந்த முதலீடும் இல்லாமல் தான்செய்தார் என்றால் சரிதான். மேற்படி மணலும், ஜல்லியும் தேவியின் இடத்தில் தான் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்துக்காகத்தான் நானும், தேவியும் கூட்டுவியாபாரம் செய்ததாக ஒரு செட்டில்

மெண்ட் ஆவணம் கடனுக்காக கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் தேவிக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்றும், எந்த கூட்டுவியாபாரம் இல்லை என்றும் வாதி லிங்கராஜ் சொல்கிறார் என்றால் சரியல்ல. என்னுடைய பெயரிலுள்ள செட்டில் மெண்ட் ஆவணத்தையும், எனது மனைவி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தையும் நான் தேவியிடம் எங்கே எப்போது ஒப்படைத்தேன் என்றால் தேவியின் இடத்தில் வைத்து கொடுத்தேன் தேதி ஞாபகம் இல்லை 2019ம் வருடம் கொடுத்தேன். 2019ம் வருடம் எங்களுடைய கூட்டுவியாபாரம் முடிவுக்கு வந்ததால் வரவு செலவு பார்த்தேனா என்றால் வாரா வாரா பார்த்துவிடுவோம். எங்களுடைய கூட்டு வியாபாரம் முடிந்துவிட்டது என்று தேவிக்கு ஏதேனும் அறிவிப்பு கொடுத்து எங்களுடைய ஆவணங்களை திருப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டோமா என்றால் இல்லை. எங்களுடைய கூட்டுவியாபாரம் முடிந்துவிட்டது ஆனால் தேவி இன்னும் எங்களுடைய ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்று தேவியின் மீது காவல் துறையில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய கையெழுத்து, கைரேகை மற்றும் என்னுடைய மனைவியின் கையெழுத்து, கைரேகை ஆகியவைகள் உண்மையானது என்று சொன்னால் வா.சா.ஆ.1ல் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்து என்னுடையது அல்ல. மேற்படி வா.சா.ஆ.1ல் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்தை தடயஅறிவியல் ஆய்விற்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். தற்போது வரை தடய அறிவியல் ஆய்விற்கு அனுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தையும்,

எனது மனைவியின் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தையும் வாதியின் சகோதரி தேவியிடம் ஒப்படைத்திருந்தேன் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தில் செட்டில்மெண்ட் செய்பவரின் கையெழுத்து மட்டும் தான் இருக்கும் என்றும், வாங்குபவரின் கையெழுத்து இருக்காது என்றால் செட்டிட்மெண்ட் ஆவணத்தில் எனது மனைவியின் கையெழுத்து மற்றும் கைரேகைகள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 15.05.2020ம் தேதியில் ஊரடங்கு உத்தரவு இருந்ததாக நான் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தேவியின் சகோதரரான வாதியிடம் தேவியின் மூலம் பழக்கத்தினால் வாதியிடமிருந்து அவரின் சேமிப்பு பணத்தை கடனாக பெற்றுக்கொண்டு அசலையும், வட்டியையும் திருப்பி தராமல் இருந்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் நான் வாதியிடம் வாங்கிய பணத்தை சட்டப்படி திருப்பி தர கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.